உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | பிங்கள௵ மாசி௴-1918௵ பிப்ரவரி௴ | இதழ் 2.

## ஆளுடைய பிள்ளையார் துதி.

பரசமய கோளரியைப் பாலறு வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங் கவுணியர்தங் குலதீ பத்தை
விரவியெமை யாளுடையவென்றிமழ விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

---

## சிவஞானபோதம்.

### நான்காஞ் சூத்திரம்.

### முதலதிகரணம்.

(4 - வது பக்கத் தொடர்ச்சி.)

### உதாரண வெண்பா.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையை யொத்து.

அன்வயம்--மனம் ஆதியால் உணர்தல் மன்னுபுலன்கள். உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை. கடற்றிரையை ஒத்து உதிக்கும். அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்.

(இ-ள்.) மனம் ஆதியால் உணர்தல் மன்னுபுலன்கள் = மனமுதலிய அந்தக்கரணங்களா லுணரப்படுவன ஐம்பொறிகளாற் றரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்.—உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை = ஆன்மா உணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற் றோன்றிய தொன்றனையாம்.— கடல், திரையை ஒத்து உதிக்கும் = அவ்விரு வேறுணர்வும் கடலிடை

யெழுந்து கரைசாருந் திரைபோல் (பரம்பரையின் ஆன்மாவிடத்தில் வந்து) தோன்றும்.—அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்=அதனாலே மனமுதலியன அவ்விடயங்களின் வேறாயினாற்போல ஆன்மாவும் அம்மனமுதலியவற்றின் வேறாம். (எ-று.)

மன் என்பது அசை - புத்தியிற் றோன்றிய தொன்றுவது சுக துக்க மோக ரூப விடயம்.

ஐம்பொறியும் புத்தியும் கடலுக்கும், அவ்விருவேறுணர்வும் திரைக்கும், ஆன்மாக் கரைக்கும் உவமிக்கப்பட்டன.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற்காட்சியுணர்வு தோன்றி, அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி, அதன்பின் தன் வேதனைக்காட்சியுணர்வு உயிரினிடத்தே வந்து தோன்றுதல். இவற்றுள் வாயிற் காட்சியாவது புறத்துள்ள சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்கள் ஐம்பொறிகளால் அறியப்படுதல். மானதக் காட்சியாவது ஐம்பொறிகளாலறியப்படும் சப்தாதி விஷயங்கள் மன முதலிய அந்தக்கரணங்களால் அறியப்படுதல். தன் வேதனைக்காட்சியாவது அந்தக்கரணங்களுள் மனத்துக்குமேலாய் புத்தியிற் றோன்றியவைகள் ஆன்மாவினால் உணரப்படுதல்.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு.

அன்வயம்—உள்ளம் ஆங்கு சித்தமாய்ச் சிந்தித்து, மனமாகிப் பந்தித்து, ஆங்காரமாய்த் தெளியாது, புந்தியாய் ஆய்ந்து, வெவ்வேறே துணிந்து இவ்வேறும். போது அவ்வேறும் போல்.

(இ-ள்.) உள்ளம்=புருடதத்துவம் என நின்ற உயிர்—ஆங்கு=வாயிற் காட்சியாற்கண்ட சத்தாதி விடயங்களுள் ஒன்றை மன முதலிய கரணங்களால் உணரும் மானதக்காட்சியினிடத்தும் (ஒரு தன்மைத்தாயிராமல்)-சித்தமாய்ச்சிந்தித்து=சித்தமாய்நின்று இது யாது எனச் சிந்தித்தும்—மனம் ஆகிப் பந்தித்து=அதன் பின் மனமாய் நின்று இது இன்னதெனப் பற்றியும்—ஆங்காரம் ஆய்த் தெளியாது=அதன்பின் அகங்காரமாய் நின்று இஃது ஆமோ அன்றோ, இதனை இன்னதெனத் தெளிவேன்யான் எனத் தெளிவு பிறவா தெழுந்தும்—புந்தியாய் ஆய்ந்து=அதன்பின் புந்தியாய்

நின்று இஃது இன்னதெனத் தெளிந்தும்—வெவ்வேறே துணிந்து இவ்வேறும்=இங்ஙனம் வெவ்வேறாகவே புணர்தலால் அவ்வாறு உணரும் புருடன் இவ் வந்தக்கரணங்களின் வேறும்—எதுபோலெனில்—போது அவ்வேறும் போல்=(ஞாயிறு முதலியவற்றோடு கூடி நின்று நாழிகை நாள் பக்கம் மாதம் வருடம் முதலிய பாகுபாடுகளைச் செய்யும்) காலதத்துவம் (அஞ்ஞாயிறு முதலியவற்றின்) வேறாயினாற்போல். (எ-று.)

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

அன்வயம்—அகார உகாரம் அகங்காரம் புத்தி. மகாரம் மனம். விந்து சித்தம். நாதம் உளவடிவாம். இவற்றைப் பகாது நாடில் பிரணவமாம். போதம் கடற்றிரையே போன்று ஆம்.

(இ-ள்.) அகார உகாரம் அகங்காரம் புத்தி=அகாரம் அகங்காரத்துக்கும், உகாரம் புத்திக்கும் சொரூபமாம்— மகாரம் மனம்=மகாரம் மனத்துக்குச் சொரூபமாம்—விந்து சித்தம்=விந்து சித்தத்துக்குச் சொரூபமாம்—நாதம் உளவடிவாம்=நாதம் ஆன்மாவுக்குச் சொரூபமாம்—இவற்றை=அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் என்னும் இச்சூக்கும பஞ்சாக்கரங்களை—பகாது நாடில் பிரணவமாம்=பகுக்கப்படாது நிற்கும்போது ஆராயில் பிரணவமாம்— போதம் கடல்திரையே போன்று ஆம்=இவை கூடின அவசரத்தில் கடலினிடத்து அலையெழுந்தாற்போல் ஆன்மாவிடத்தில் அறிவு உண்டாம். (எ-று.)

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

அன்வயம்—எண்ணிலவு ஓங்காரத்து நண்ணிய விந்துவொடு நாதத்து அதிதெய்வம் கண்ணில் ஈசர் சதாசிவமாம். அகர உகர மகரத்து (அதிதெய்வம்) பகர் அயன்மாலோடு பரமன் ஆம்.

(இ-ள்.) எண்ணிலவு ஓங்காரத்து நண்ணிய=சூக்கும பஞ்சாக்கரங்களின் உருவமாக எண்ணப்படும் பிரணவத்திற் பொருந்திய—விந்துவொடு நாதத்து அதிதெய்வம்=விந்துவுக்கும் நாதத்துக்கும்

அதிதெய்வம்--கண்ணில்=கருதில்—ஈசர் சதாசிவமாம்=முறையே மகேசுரரும் சதாசிவருமாம்—அகர உகர மகரத்து அதிதெய்வம்= அகார உகார மகாரங்களுக்கு அதிதெய்வம்—பகர் அயன்மாலோடு பரமன் ஆம்=முறையே (சுத்தவித்தியா தத்துவத்தில் வைகுவார் என்று) சொல்லப்படும் பிரமனும் மாலும் உருத்திரருமாம். (எ-று.)

இவ்விரு வெண்பாக்களும், அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்னும் இவ்வைந்தும் சடமாதலால் இவைகளைக் கருவியாகக்கொண்டு ஆன்மா எவ்வாறு அறிதலைச் செய்யுமெனின், அக்கருவிகளுள் அகங்காரத்திற்கு அகாரமும், புத்திக்கு உகாரமும், மனதிற்கு மகாரமும், சித்தத்திற்கு விந்துவும், உள்ளத்திற்கு நாதமும் என்கின்ற எழுத்துக்கள் உடனின்று செலுத்துவதால் அறிதலைச்செய்யும் எனவும்— எழுத்துக்களும் சடமாதலால் அவை எப்படி யறிதலைச்செய்யுமெனின், அவைகளை முறையே பிரமாவும், விஷ்ணுவும், உருத்திரனும், மகேசுரரும், சதாசிவருமாகிய ஐவரும் அதிதெய்வங்களாக நின்று செலுத்துவர் எனவும்—இவ்வாறு கரணமும் அக்கரமும் அதிதெய்வமுமாகிய முத்திறத்துப் பதினைந்தோடும் ஆன்மா பொருந்தியவிடத்து அறிதற்றொழிலைச் செய்யும் எனவும் விளக்கியவாறும்.

யோகப் பயிற்சியுடையோர்க்கே இவ்வுண்மை இனிது விளங்கும். இதனை "வளியிரண்டுந் தவிர்த்துறிற் றுனுந் தோன்றும்" எனும் சிவஞானசித்தியால் அறிக.

---

## வைதிக சைவமும் அதன்தெய்வ விலக்கணமும்.

சைவம் சிவத்தொடு சம்பந்த மென்றூன்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி ... ... எனவும்,
சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனு நான்மறை ... எனவும்,
சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் ... ... எனவும்,
சைவமுதலா அளவில் சமயம் வகுத்து மேற்சமயங் கடந்தமோன
சமரசம்வகுத்தநீ உன்னை நானணுகவுந் தண்ணருள் வகுக்கவிலையோ
எனவும்

திருவாக்குகள் எழுந்துள்ளன. இவை எவ்வளவு தூரம் உண்மை என்பதைப்பற்றி வைணவராதியோர் துதிக்குமாறு ஆராய்வாம்.

இப்பாசுரங்களில் முக்கியமாய் விசாரிக்கவேண்டிய சொற்கள் சைவம் சிவம் என்னும் இரண்டு பதங்களேயாம். சைவமாவது வேதசிவாகமங்களின் முடிந்த முடிபாயுள்ள சமயமாகும். இதுவே அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நால்வகைச் சமய பேதங்களையும் தன் கீழ்ப்படுத்தித் தான் அவற்றிற்கெல்லாம் சிரசாய் ராஜாங்கத்தில் வீற்றிருப்பது. இதன் வழிபாடு ஞானமார்க்கமொன்றேயாம். தெய்வ வழிபாடாகிய சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று வழிபாடுகளும் ஞானவழிபாட்டுக்கு அங்கமாயுள்ளன. சரியையாதி மூன்றும் சிவத்தை நேரே வழிபடும் மார்க்கங்களல்ல. அவை சிவம் ஆன்மாக்களின் பொருட்டுக் கொண்டருளும் தடஸ்தவடிவங்களை வழிபடும் மார்க்கங்களாம். ஞானவழிபாடோ "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் வாக்கின்படி மெய்ப்பொருளாகிய சொரூப சிவத்தையே நேரே வழிபடுமார்க்கமாம். இதனால் வேதாந்த சித்தாந்தமாகிய வைதிக சைவமென்னும் சித்தாந்த சைவமே சமயங்கடந்த மோன சமரசம் என்பதூஉம், அதில் பிரதிபாதிக்கப்பட்ட தெய்வம் சிவம் என்பதூஉம் தானே போதரும்.

ஆன்மாக்களின் நிலை பெத்தமும் முத்தியும் என இருதிறப்பட்டு நிற்பதுபோல் சிவத்தினது நிலையும் இருதிறப்பட்டு நிற்கின்றது. உயிர்களின் பொருட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்யும் நிலை தடஸ்த நிலை எனவும், பஞ்சகிருத்தியஞ் செய்தலாகிய அதிகாரத்தினின்றும் நீங்கிக் கேவலம் தான்மாத்திரமாய் சத்து சித்தாய் நிற்கும் நிலை சொரூபநிலை எனவுஞ் சொல்லப்படும்.

சிவம் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாயுள்ளது. அது ஆன்மாக்களின் பொருட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்யும் அவசரத்து பதி என்று சொல்லப்படுகிறது. அக்கிருத்தியமும் சுத்த மாயையில் மாத்திரம் நிகழும். அப்பதியினாலே செய்யப்படும் சுத்தமாயா கிருத்தியத்துக்கு வேறாக அசுத்த மாயையில் அநந்த தேவரால் பஞ்சகிருத்தியம் நடைபெறும். அதற்கும் வேறாகப் பிரகிருதி மாயையில் ஸ்ரீகண்டருத்திரரால் பஞ்சகிருத்தியம் நடக்கும். இக்கிருத்திய நிகழ்ச்சியில் பதியின் சக்தி அநந்த தேவரை அதிஷ்டிக்க, அநந்ததேவர் ஸ்ரீகண்டருத்திரரை அதிஷ்டிக்க, அவர் பிரம விஷ்ணுக்களை அதிஷ்டிக்க இவ்வாறு பதி

யினது சக்தியின் அதிஷ்டானவாயிலாகவே யாவும் நடைபெறு மென்றோர்க.

இத்தகைய உண்மையினை அறியாத ஏகான்மவாதிகளும் வைணவர்களும் சித்தாந்த சைவ கண்டனஞ் செய்கிறோமென்று ஆரவாரஞ்செய்து கிளம்பி புராணங்களிலே கூறப்பட்டுள்ள சில கதைகளை யெடுத்துக்கொண்டு, ஆக்ஷேபனைகள் தொடுத்துச் சைவத்தைக் கண்டித்து விட்டோமென்று மகிழ்ச்சி யடைகின்றனர். ஐயோ பாவம்! இவர்களுடைய வெள்ளறிவைக்கண்டு வைதிக சைவர்கள் யாரும் விசனிக்கின்றார்கள். கிருத்திய கர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளுடைய கதைகளே புராணங்களில் கூறியுள்ளன. இக்கதைகளுள் சில விஷயங்களே இவர்களால் ஆக்ஷேபிக்கப்படுகின்றன. இவைகளை எடுத்து விரித்து சம்ஹாரகர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியைக் கண்டித்து எழுதிவிடுவதினால் வைதிக சைவம் கண்டிக்கப்பட்டுப் போயிற்றென எண்ணுவது அறியாமையாகும். இவர்கள் நினைக்கிறபடி வைதிக சைவம் உருத்திரமூர்த்தியிலாவது அவருடைய சரித்திரங்களைக் கூறும் புராணக்கதைகளிலாவது தங்கிநிற்கவில்லை.

புராணங்களிலே பிரம விஷ்ணு ருத்திரர்களைப் பரம்பொருளென்று கூறியது அர்த்தவாதமேயன்றி உண்மையன்று. அது பற்றியே புராணங்களிலே பிரதிபாதிக்கப்படுகிற மதத்தைப் *பௌராணிக மதமென்று வேறுபிரித்து வைத்துள்ளார்கள். பௌராணிக மதமும் வைதிக சைவமும் ஒருபோதும் ஒத்து நடப்பனவல்ல. பௌராணிக மதத்திலே தோன்றும் ஆசங்கைகளுக்கு வைதிக சைவம் உத்தரவாதஞ் சொல்லக் கடமைப்பட்டில்லை.

புராண கர்த்தாக்களாகிய பிரமா விஷ்ணு ருத்திரர்களைப்பற்றி விசாரிக்குமிடத்து, பிரமாவைப் பரம்பொருளென்று வைதிக சைவம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் ஆன்மவர்க்கத்துட்பட்டவர். அவரது தொழில் சிருட்டி. அந்தத்தொழிலும் பிரம பதமும் அவருக்குப் புண்ணியப்பயனால் வந்தது. எவர் பிரம பதத்துக்குரிய புண்ணியஞ் செய்தவரோ அவர் அந்தப்பதவியை அடைவரென்பது திண்ணம். அப்புண்ணியம் அநுபவித்து ஒழிந்தகாலத்து அப்பதமும் அவருக்கு அகன்றுபோம். ஒருவர் அப்பதத்தைவிட்டகல மற்றொருவர் அதையடைவர். மனிதருடைய

* இதனால் புராணங்கள் முற்றிலும் கண்டிக்கப்படுவனவாக மயங்கலாகாது. (ப - ர்.)

கால அளவில் இரண்டாயிரஞ் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒருநாளாகும். இப்படி முந்நூற்றறுபத்தைந்து நாள் ஒருவருடமாம். இவ்வாறு நூறுவருடங்கொண்டது பிரமாவுடைய ஆயுள். அந்த ஆயுள் முடிவில் பிரமா இறந்துவிடுவர். பிறகு அப்பதத்துக்குரிய புண்ணியமுடைய வேறொரு ஆத்மா பிரமாவாய் வருவர். இப்படி எண்ணில்லாத பிரமாக்கள் அழிந்துபோவார்கள். இவ்வண்டத்தைப்போல பிருதிவிதத்துவத்தில் ஆயிரகோடி அண்டங்கள் உண்டு. ஒவ்வொரு அண்டத்திலும் ஒவ்வொரு பிரமாவாக ஆயிரகோடி பிரமர்கள் உளர். இப்பிரமாவின் இயல்பு எப்படியோ அப்படியே அவர்களுடைய இயல்புகளுமாம். ஆதலால் நல்வினை தீவினை வசப்பட்டுப் பிறந்திறந்துழலும் தன்மையுடைய பசுவர்க்கத்துள் வைத்தெண்ணப்படும் பிரமாவைப் பதியென்பார் ஒருவருமில்லை.

இனி விஷ்ணுவும் ஆன்மவர்க்கத்துட்பட்டவரே. அவர் பதம் வைகுண்டமாகும். அவரது தொழில் காத்தல். அத்தொழிலும் அவரெய்திய பதமும் புண்ணியப்பயனால் வந்தது. பிரமாவின் இயல்புபோலவே விஷ்ணுவின் இயல்புமுள்ளது. ஒருவிஷ்ணுவின் ஆயுளுள்ளே அனேக பிரமர்கள் தோன்றி அழிவார்களென்றால், விஷ்ணுவின் ஆயுள் பிரமா ஆயுளைவிட எத்தனையோ மடங்கு அதிகமானதன்றோ. ஆதலின் விஷ்ணுவானவர் பிரமாவைவிட மிகவும் மேம்பட்டவர். அவர் அதிகாரத்தானும், ஸ்ரீகண்டருத்திரருக்குத் தேவியாயிருக்கும் உரிமையானும், வைதிக சைவர் யாவரானும் வணங்குதற்குரியராயுள்ளார்.

இனி சம்ஹார கர்த்தாவாகிய ஸ்ரீகண்டருத்திரர் ஆன்மவர்க்கத்துட் படிக்கப்பட்டிருப்பினும், இருமலமுடைய பிரளயாகலரில் பக்குவமுடையோராய்ப் பந்தம் நீங்கி முத்திபெற்ற கடவுளாதலால் பசுவர்க்கத்துள் வைத்து எண்ணப்படுபவரல்லர். வேதங்களில் ஒவ்வோரிடங்களில் இவரை அயன்மாலோடு சேர்த்துப் பசுவாகக் கூறியது முன்னிருந்த இருப்பை நோக்கியல்லது வேறல்ல. பாசமுடையவரே பசுவெனப்படுவர். இவர்பாசநீங்கி முத்தொழில் செய்யும் அதிகாரம் பெற்றுச் சிவசத்தியால் அதிஷ்டிக்கப்பட்டவராய், மூர்த்தித்திரயாதீத சிவபெருமானுக்குரிய மான் மழு சதுர்ப்புஜம், காளகண்டம், திரிநேத்திரங்கள் பெற்றவராய், சிவசொரூபியாய் விளங்குதலின் பரமசிவத்துக்குரிய எல்லாப்பெயரும் வடிவும் தொழிலும் பெற்றுச் சைவாகமங்களை அறிவுறுத்துங் குரவ

ராய், அயன்மால் இருவருக்கும் மேலாய், சைவத்தின் எய்திச் சமயதீக்ஷை பெற்றோரால் வழிபடுங் கடவுள் ஆயினர். ஆதலால் இவரைப் பதிவர்க்கத்துள் வைத்து எண்ணுதல் சைவ சமயக்கொள்கையாம். இவர் சிருஷ்டி ஆரம்பத்திலேயே பிரளயாகலரிலிருந்து பதியாக்கப்பட்டு ஸ்ரீ கைலாசபதியாய் விளங்குகின்றாரென்று மிருகேந்திரமுதலிய ஆகமங்களில் கூறியிருக்கின்றது. இவரே பிரமவிஷ்ணுமுதல் பிபீலிகாந்தமாயுள்ள சகல ஜீவராசிகளையும் மூலப்பிரகிருதியின் காரியமான பிரபஞ்சங்களில் வைத்து வாங்கிப் பஞ்சகிருத்தியஞ்செய்து அவரவர் கன்மங்களுக்கேற்ற பயனைக் கொடுப்பர். மும்மலமுடைய சகலவர்க்கத்துட்பட்ட எல்லா உயிர்கட்கும் கர்த்தாவாயிருப்பவரும் இவரே. இவ்வுண்மையை ஸ்ரீ தாயுமானசுவாமிகள் "தேன்முகம்" என்னும் பதிகத்தில் கட்டளைகளால் விளக்கியுள்ளார். இவர் இவ்வாறு ஜகத்துக்குக் கர்த்தாவாயிருப்பினும், இவரை நடத்துவது சிவசத்தியாதலால் எல்லா முதன்மையும் சத்திமானாகிய சிவபெருமானுக்கே உரியதென் றுணரவேண்டும். இத்தகைய உண்மையெல்லாம் பதிநூலாகிய சிவஞானபோதமுதலிய மெய்கண்டசாஸ்திரங்களில் ஆழ்ந்த உணர்ச்சியுடைய வைதிக சைவர்களுக்கே விளங்குவதன்றி ஏனையோர்க்கு எட்டுணையும் விளங்கமாட்டாது. செப்பினும் வெகு தர்க்கமாம்.

மேற்சொன்ன திரிமூர்த்திகளுக்குமேல் மகேசுரர் ஒருவர் உளர். அவருக்குமேல் சதாசிவர் உளர். அவ்விருவருடைய சரித்திரங்கள் புராணங்களில் கூறப்படவில்லை. சதாசிவருக்குமேலே பதிப்பொருள் விளங்குகின்றனர். அப்பதிப்பொருளுக்கு நாமரூபமுதலியன இன்மையால் புராணங்களிலே அப்பதியின் கதைகள் கேட்கப்படவில்லை. அதற்குமேலிருப்பது வைதிக சைவத்துக்குரிய தெய்வமாகிய சுத்தசிவம். அது ஒன்றேயாம். அதற்கு ஒத்ததும் மிக்கதுமான பொருள் ஒன்றுமில்லை. அதனையே முதிர்ந்த பரிபாகிகளாகிய வைதிக சைவர்கள் யாவரும் பரமுத்தியின் பொருட்டு உபாசிப்பர். அதன் உபாசனையே முத்திக்குச் சாதனமாம். இப்படி நுனித்த மதிகொண்டு ஆராய்ந்து பார்க்கும் பொழுது, வைணவர் முதலியோரால் ஆக்ஷேபனை செய்யப்படுதற்கு இடமாயுள்ள புராணக்கதைகளிலே கூறப்பட்டவர் எவர் என்பதை விவேகிகள் உணரப்பெறுவர். புராணக்கதைகளுக்கு உட்பட்டவராகிய ஸ்ரீகண்டருத்திரர் வைதிக சைவத் தெய்வமாகிய சுத்தசிவம்

அன்றாகலின் அவருடைய செயல்களில் தோன்றும் ஆக்ஷேபனைகளுக்கு அச்சுத்த சிவத்தை உத்தரவாதமாக்க ஒருபோதும் இயலாது. மேலும் அதற்குக் கீழுள்ள பதியையாவது சதாசிவரையாவது மகேசுரரையாவது உத்தரவாதிகளாகக் கொள்ளவும் முடியாது. ஸ்ரீகண்டருத்திரரே தங்கதைகளுக்கு உத்தரவாதியாவர். இதை மறுக்க எவராலுமாகாது. ஸ்ரீகண்டருத்திரருடைய கதைகளைக்கொண்டு கண்டனமெழுதிவிட்டு வைதிக சைவத்தைக் கண்டித்து வென்றுவிட்டோமென்று மனப்பால்குடித்து மகிழ்தல் வீண்செயலேயாம். புராணசரித்திரங்களைக்கொண்டு எழுதுங் கண்டனமெதுவும் நம் வைதிக சைவத் தெய்வமாகிய சிவத்தை எட்டிப் பார்ப்பதே கிடையாது.

இன்னும் ஸ்ரீகண்டருத்திரர்மேல் வைணவராதியோர் ஏற்றுங் குற்றங்கள் தாமும் குற்றங்களாகக் கொள்ளத்தக்கவையல்ல. அவை யாவும் செயல்வகையால் குற்றங்களாகக் காணப்படினும் கருத்து வகையால் யாவும் அருளேயாதல் கடைக்காலறியப்படும்.

அரசனேயன்றி அரசனுடைய ஆணையைத் தாங்கி உலகத்தைக் காக்கும் மந்திரி பிரதானி முதலாயினாரும் அரசமரியாதை பெறுதற்கும், உலகத்தாரால் ஏத்தப்படுதற்கும் உரியராயிருத்தல் போல் முழுமுதற்பொருளாகிய சிவம் மாத்திரமன்றி அச்சிவத்தின் சத்தியினால் நடத்தப்படும் கர்த்தாக்களும் அச்சத்தியுடைமை காரணமாக வணங்கப்படுதற்கு உரியவரேயாவர். சதாசிவ மகேசுர வடிவங்கள் சிவம் நேரிற்கொண்ட வடிவங்களாதலால் சிவமாகவே வணங்கப்படுதற்குரியன. ஸ்ரீகண்டருத்திரவடிவம் சிவசத்தியால் அதிஷ்டிக்கப்படுதலாலும் சிவபெருமானுக்குரிய வடிவங்கள் அமையப்பெற்றதுமாயிருத்தலாலும் சிவமென்றே பாவித்து வணங்கப்படுதற்குரியது. பிரமவிஷ்ணுக்களும் அவ்வாறே அதிஷ்டிக்கப்பட்டுச் சிவனுக்குரிய படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்தலால் சிவபேதத்துள்வைத்து வணங்கச் சைவாகமவிதி ஏற்பட்டுள்ளது.

இன்னும் சிவபேதவடிவங்கள் சம்புபட்சம் எனவும் அணுபட்சம் எனவும் இருவகைப்படும். முதற்பெருங்கடவுளாகிய இறைவர் ஊரும், பெயரும், உருவுங்கடந்தவராயினும் உயிர்களிடத்தே வைத்த கருணையால் ஊரும், பெயரும், உருவுங்கொண்டு மனத்தினாலே தியானித்தற்கு ஏற்ற வடிவங்கள் கொண்டருளுவர். அப்படிக்

கொள்ளுமிடத்துத் தனது அருட்சத்தியினிடமாகக் கொள்ளுதலும் மாயையினிடமாகக் கொள்வதும் என்னும் வேறுபாடுபற்றி அவை இருவகைப்படும். அருட்சத்தியினிடமாகக் கொள்ளும் வடிவங்கள் சம்பு பட்சமெனவும், மாயையினிடமாகக்கொள்ளும் வடிவங்கள் அணுபட்சமெனவுங் கூறப்படும். ஆடியில் நிழல்போல்வது அருட்சத்தியினிடமாகக் கொள்ளுதல். அது பூசை தியானுதிகளின் பொருட்டேயாம். சூரிய சந்நிதானத்தில் இருள்முனைத்து நில்லாதவாறுபோல சிவத்தின் எதிரே மலமாயை கன்மங்கள் முனைத்து நில்லா. அதனால் அவை சிவத்தினல் இயக்கமுருது, சத்தியின் ஏகதேச வியாபரிப்பில் தொழிற்படுகின்றன. அவற்றை முதல்வன் என்றுகொள்ளாதபடியால் சத்தியின் அதிஷ்டானமாகிய அவை அணுபட்சமென உணரற்பாற்று.

(இன்னும் வரும்.)

சோளங்கிபுரம். சிவஅருணகிரிமுதலியார்.

---

## சிவராத்திரி.

பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் ஒருவருக்கொருவர் நான் பிரமம் நான் பிரமம் என்று வாதஞ்செய்த காலத்து அவ்விருவரிடையே அடிமுடியைக் காணக்கூடாமல் அக்கினிமயமாகிய ஓர் ஸ்தாணுவடிவமாய் பிரம்மஸ்வரூபியாகிய பரமசிவம் ஆவிர்ப்பவித்த காலம் சிவராத்திரிகாலம். அக்காலம் மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி சோமவாரம் திருவோண நட்சத்திரங் கூடிய புண்ணிய காலமென்க. அப் பிரம விஷ்ணுக்களுக்கு சகளீகரித்த நாழிகை இராத்திரி பதினைநாழிகை என்க. சகளீகரித்த சிவபெருமான் அடியுமுடியுங் காணுது திகைத்துநிற்கும் பிரம விஷ்ணுக்களை நோக்கி பிரமனே நீ முடியைக்காணுது கண்டதாகப் பொய்யுரைத்தபடியால் உனக்குக் கோயிலில்லாமற் போகக்கடவது என்று அவனுக்கு நிக்கிரகமும், விஷ்ணுவே நீ அடியைக்காணுமல் காணவில்லையென்றே மெய்கூறியபடியால் உனக்குக் கோயிலும் இரட்சிக்குந் தொழிலுந் தந்தோமென்று திருமாலுக்கு அனுக்கிரகமும் செய்தனரென்க. தேவர்களெல்லாந் தரிசிக்க ஒருமுகூர்த்தமப்படியே அத்திருவுருவத்தோடு நின்றமையால் இலிங்கோற்பவ காலம் ஓர் முகூர்த்தமென்று விதிக்கப்பட்டதென்க. இராத்திரி காலத்தில் பரமசிவம் மஹேசுவரமூர்த்தமாயுதித்தபடியினலே சிவ

ராத்திரியென்று பேர் வந்தது. அக்கினிமயமாகிய தாணுசுவரூபமான அந்த இலிங்கத்தினின்றும் பரசிவம் மஹேஸ்வரமூர்த்தமாய் வெளிவந்தபடியால் இலிங்கோற்பவமென்று திருநாம முண்டாயிற்று.

அன்றியும் பிரமதேவனுக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்தில் சீவராசிகள் முழுவதும் ஒழிந்துபோன காலம் இராத்திரிகாலம். அந்த இராத்திரி நான்கு சாமத்திலும் பார்வதிதேவியார் பரமசிவனைப் பூசித்து மறுபடி சிருஷ்டி தொடங்குங் காலத்தில் பார்வதிதேவியார் பரமசிவத்தை நோக்கி நான் தேவரீரைப் பூசித்த இந்த இராத்திரி சிவராத்திரி யென்று பெயர்பெறவும், விரதமிருந்து இந்தக்காலத்தில் பூசிப்பவர்கள் சாயுச்சியம் பெறவுங் கிருபை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

ஆகையால் மாசிமாதம் அபரபட்ச சதுர்த்தசி திதியில் சூரியோதயகாலத்தில் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துச் சிவத்தியானத்துடன் அன்று பகல் முழுவதும் உபவாசமாயிருந்து இராத்திரி நான்கு சாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூசை செய்யவேண்டும்.

சிவபூசை யில்லாதவர்கள் ஆலயத்திற்சென்று பரமசிவத்துக்கு அபிஷேகமுதலானவைகள் செய்வித்துத் தரிசனம்பண்ணி மறுநாள் உதயமானவுடன் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவதரிசனஞ் செய்துவந்து பாரணஞ் செய்யவேண்டும். சிவராத்திரி தினம் இராத்திரி பதினலு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலமாக விதிக்கப்பட்டிருப்பதினுல் அந்தக் காலத்தில் அவசியம் சிவதரிசனஞ் செய்யவேண்டும். சிவராத்திரி தினத்தில் பரார்த்த பூசையாவது ஆன்மார்த்த பூசையாவது தங்கள் தங்கள் நியமப்பிரகாரம் நடத்தவேண்டியது.

பரார்த்தத்துக்காவது, ஆன்மார்த்தத்துக்காவது சூரியதேவர் முதலான பரிவாரங்களுக்குப் பூசை நடத்தவேண்டியதில்லை. பரார்த்தத்துக்கு மஹாலிங்கமுதலான மூல மூர்த்திகளுக்கும் ஆன்மார்த்தத்துக்கு இலிங்கமூர்த்திக்கு மாத்திரமுமே பூஜை நடத்தவேண்டியது. பரார்த்த ஆன்மார்த்தங்களில் மஹாகணபதிக்கு மாத்திரம் நான்கு காலத்திலும் பூசை நடத்தலாம்.

க-வது காலம்—அபிஷேகம் பஞ்சகௌவியம். வஸ்திரம் செம்பட்டு. பத்திரம் வில்வம். கந்தம் பச்சைகர்ப்பூரம் சேர்ந்த சந்

தனம். நிவேதனம் பாற்பொங்கல். தூபம்-சாம்பிராணி, சந்தனக் கட்டை. தீபம் புட்ப தீபம்.

உ-வது காலம்--அபிஷேகம் பஞ்சாமிர்தம். வஸ்திரம் மஞ்சள் பட்டு. பத்திரம் குருந்தை. கந்தம் அகிற்சந்தனம். நிவேதனம் பாயசான்னம். தூபம் குங்குமம். தீபம் நக்ஷத்திரதீபம்.

ங-வது காலம்—அபிஷேகம் பலோதகம். வஸ்திரம் வெண் பட்டு. பத்திரம் கிளுவை, விளா. கந்தம் கஸ்தூரிசேர்ந்த சந்தனம். நிவேதனம் எள்ளோதனம். தூபம் கருங் குங்கிலியம். தீபம் ஐந்து முகதீபம்.

ச-வது காலம்—அபிஷேகம் கந்தோதகம். வஸ்திரம் நீலப்பட்டு. பத்திரம் கருநொச்சி. கந்தம் புனுகுசேர்ந்த சந்தனம். நிவேதனம் சுத்தான்னம். தூபம் கர்ப்பூரம் லவங்கம். தீபம் வில்வார்த்தி.

மேலெழுதிய நான்குகால பூசைக்கும் விதித்திருக்கின்ற திரவி யங்களோடு யதாவிதியான அபிஷேக முதலானவைகளும் பத்திர புட்பங்களும் சித்திரான்னங்களும் அபூபவகைகளும் சோடசோப சார தீபாராதனைகளும் நடத்தவேண்டியது. இந்த நான்குகால பூசைகளும் மஹாலிங்க மூர்த்திக்கு அஷ்டபுஷ்ப பூர்வமாக நடத்த வேண்டியது. அஷ்டபுஷ்பவிதியை ஆசாரியர் மூலமாயுணரவேண் டியது. அஷ்டபுஷ்பமென்பது அர்ச்சனைக்காகிய எண்வகைப்புட் பங்களும், மந்திரபூர்வமா யுள்ளதுமென்க.

### ஆன்மார்த்த பூசைக்கு ஸ்தானம்.

ஆலயம் - புண்ணியஸ்தலம் - நதிதீரம் - பர்வுதம் - புட்பவனம் ஆசாரியர்வீடு-தன்வீடு-இந்தஸ்தானங்களாம்.

### சிவராத்திரி புண்ணியகாலத்தில் பண்ணவேண்டிய தானங்கள்.

சிவலிங்கம், உருத்திராக்ஷம், விபூதிப்பை, நவரத்தினம், பொ ன், வெள்ளி, கோ, பூமி முதலானவைகளாம். ஆகையால் மேற் குறித்த விடங்களில் பூஜையும் இந்த தானங்களையுஞ்செய்து மறு நாள் பிராமண சந்தர்ப்பணையும் மஹேஸ்வர பூஜையும் நடத்த வேண்டியது. இந்த மஹா சிவராத்திரி விரதத்தை கிருத யுகத்தில் விநாயகமூர்த்தியும், திரேதாயுகத்தில் ஷண்முகமூர்த்தியும் துவா பரயுகத்தில் பிரமதேவரும், கலியுகத்தில் விஷ்ணு மூர்த்தியும்

அனுஷ்டித்ததாக வாதுளமுதலிய ஆகமங்களிலும் காலோத்தர முதலிய உபாகமங்களிலும் பௌஷியோத்தர முதலிய புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

வித்வான்-கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

---

## வணக்க விதி.

"ஒருகையி னாலே தொழுகை யொழிக,
இருகையுங் கூப்பி யினிது"

(இ-ள்.) ஒருகையினாலே அஞ்சலி பண்ணக்கூடாது. இருகைகளையுங் குவித்து வணங்கில் நன்று. (எ-ம்.)

"தேவரடி முன்றொழுக சென்னிமிசைக் கைகுவித்துப்,
பாவவினை தன்னை யறுப்பார்"

(இ-ள்.) தாங்கள் செய்த பாவ கன்மங்களை நீக்க விரும்புவோர்கள் தேவர்களுடைய பாதங்களை அவர்கள் சந்நிதானத்திற் சென்று இரண்டு கைகளையும் சிரசின்மேலே குவித்து வணங்கக்கடவார்கள். (எ-ம்.)

"குளத்திற் குவிகை யிணைகுரவற் கன்பர்க்,
குரத்திற் குவிகை யுகந்து"

(இ-ள்.) ஆசாரியருக்கு வணக்கஞ் செய்யுமிடத்து இரண்டுகைகளையுங் கூப்பி நெற்றியிலே யஞ்சலிபண்ணுக. சாதகர்முதலிய பத்தர்களுக்கு வணக்கஞ் செய்யுமிடத்து மனமகிழ்ந்து மார்பிலே அஞ்சலிபண்ணுக.

### நின்று வணங்கல்.

பரமேஸ்வரருக்குச் சிரசின்மேல் 12 அங்குலம் உயர்த்திக் கைகூப்பி வணங்கல் வேண்டும்; மற்றதேவர்களுக்குச் சிரசின் மேல் கைகூப்பி வணங்கல்வேண்டும்;

குருவுக்கு நெற்றியில் கைகூப்பி வணங்கல்வேண்டும். அரசருக்கும் பிதாவுக்கும் வாய்க்குநேர் கைகூப்பி வணங்கல் வேண்டும். அந்தணர் முதலியோருக்கு மார்பில் கைகூப்பி வணங்கல்வேண்டும். தாய்க்கு வயிற்றில் கைகூப்பி வணங்கல்வேண்டும்.

### தண்டாகாரமாகவணங்கல்.

மாதா பிதா குரு தெய்வம் இவர்களுக்கு மாத்திரம் அஷ்டாங்கமும் நிலத்திற்படும்படி வணங்கல்வேண்டும். மற்றையோருக்குத் தண்டாகாரங்கூடாது. பெண்கள் முன்சொன்னவர்களுக்கும் முக்கியமாய்க் கணவனுக்கும் ஐந்தங்கங்களும் நிலத்திற்படும்படி வணங்கல்வேண்டும்.

வித்வான்-கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்.

## குருபூசை.

இது சிதம்பரம் உபாத்தியாயர் பேரம்பல பிள்ளையவர்கள் குமாரர் இராமலிங்க பிள்ளையவர்கள் வெளியிட்ட பெரியபுராண முகவுரையிலிருந்து எடுத்து இங்கு அச்சிடப்பட்டது.

சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்றும், வேதமுஞ் சிவாகமமுமே அவர் அருளிச்செய்த முதனூல்கள் என்றும், அவற்றுள் வேதம் பொதுநூல் சிவாகமம் சிறப்புநூல் என்றும், விபூதி ருத்திராக்ஷங்களே சிவசின்னங்கள் என்றும், ஸ்ரீபஞ்சாக்ஷரமே சிவமூலமந்திரம் என்றும், சிவலிங்கோபாசனையே சிவபிரானுக்குச் செய்யப்படும் மிகமேலாகிய வழிபாடு என்றும், விபூதி ருத்திராக்ஷ தாரணமும் ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபமும் சிவலிங்கோபாசனையும் வேதத்தில் விதிக்கப்படினும் சிவாகமத்தில் விதித்தபடி சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு அனுட்டிக்கப்பட்டாலன்றி முத்தி சித்தியாது என்றும், விசுவசித்து, அங்ஙனம் விசுவசித்தபடியே ஒழுகும் மார்க்கம் சைவசமய மெனப்படும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களாலும், மாணிக்கவாசக சுவாமிகளாலும், பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாராலும், சைவசித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்தருளிய திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞானசம்பந்தசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்னு நால்வர்களாலுமே தமிழ்நாடெங்கும் சைவசமயந் தழைத்தோங்கியது.

ஆதலினாலே, சைவசமயிகள் யாவரும் அவ்வுண்மை நாயன்மார்களுக்கு விதிப்படி சிரத்தையோடு குருபூசை நடத்தல்வேண்டும்.

அந்நாயன்மார்களெல்லாருக்கும் குருபூசை செய்யச் சத்தியில்லாதவர்கள், அவர்களுள்ளே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சமயகுரவர்கள் நால்வரும், சேக்கிழார்நாயனாரும், மெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர்கள் நால்வருமாகிய ஒன்பதின்மருக்கு மாத்திரமாயினும் குருபூசை செய்வது அத்தியாவசியகம்.

குருபூசை செய்தற்குப் பொருளில்லாதவர்கள் தங்களாலியன்ற பதார்த்தம் யாதாயினுங் கொண்டுபோய்க் குருபூசை நடக்குந்

தானத்திற் சேர்த்தல்வேண்டும். அதுவுங்கூடாதாயிற் கறிதிருத்து தல் முதலிய கைத்தொண்டுகளேனுஞ் செய்தல்வேண்டும்.

## இனிக் குருபூஜைக் கிரமமாமாறு:—

அந்த அந்த நாயனாருக்கு, அவரவர் முத்திபெற்ற திருநக்ஷத்திரத்திலே, திருக்கோயிலிலே விசேஷபூசையும் வேதபாராயண தேவாரபாராயணங்களோடு உற்சவமும் செய்வித்தல் வேண்டும். திருமடத்திலாயினும், தங்கள் தங்கள் வீடுகளிலாயினும், சமய தீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், நிர்வாணதீக்ஷிதர், ஆசாரியர் என்னும் நால்வகை மாகேசுரர்களையும் தூரத்தே கண்டவுடனே சிரசின்மீது அஞ்சலிசெய்து விரைந்தெதிர்கொண்டு அழைத்துவந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி அத்தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து, அவர்களைப்பந்தியாக இருத்தி, ஓதுவார்கள் தேவாரம் ஓத, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து அவ்வடியார்களை அத்திருநக்ஷத்திரத்திலே முத்திபெற்ற நாயனாராகப் பாவித்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்து, தூபதீபங் கொடுத்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணி, மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, திருவமுது செய்வித்தல் வேண்டும்.

குருபூசை செய்பவர்களும், செய்விப்பவர்களும், குருபூசையிலே அருச்சனையேற்று அமுதுசெய்யப்புகும் மாகேசுரர்களும், அத்தினத்திலே குருபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின், அன்னம் புசியாது, பால் பழ முதலியவற்றில் இயன்றது உட்கொண்டு, சுத்தர்களாகிச் சிவபெருமானையே சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்தல்வேண்டும்.

வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்தபலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ்செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிராமணர் லக்ஷம்பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் நிருவாணதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ்செய்தபலமும், சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும். வேதாந்த மகாவாக்கியத்தை அறிந்த கோடி வைதிகப்பிராமண சந்நியாசிகள் கூடினும், நிருவாண தீக்ஷை

பெற்றுக்கொண்டு சைவசித்தாந்த நூல்களாகிய சிவஞான நூல்களை ஓதிப்பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை அறிந்த ஒரு சைவருக்குச் சமமாகார்கள். இது சிவவாக்கிய சிவாகம நூற்றுணிபு.

வாயுசங்கிதை:—"சைவநூலிற் கூறப்பட்டதும் பாசமூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறு யாதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று; ஆதலால் தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும் மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர் போல்வர்; தோணியின்றிக் கடலைக் கடக்க விரும்பினவர்போல்வர்."

காந்தம்; பிருகுசர்பப்பிரகரணம்:—"இங்கே முப்பாசத்தை அகற்றுவதும் மேலானதுஞ் சிவசம்பந்த முடையதுமாகிய தீக்ஷையாலன்றி ஆன்மாக்களுக்கு ஆச்சிரமத்தாற் செய்யப்பட்ட உயர்ச்சியொன்றுமில்லை. ஆதலிற்றீக்ஷையாலே முத்தி. ஆச்சிரமங்களாலும் பிறகருமங்களாலும் முத்தியில்லை."

இவ்வுண்மையைச் சிறிதும் நோக்காது சைவசமயிகளுள் அநேகர் ஆதிசைவர் முதலிய சைவர்களை அவமதித்துத் தள்ளிவிட்டு, அதீக்ஷிதர்களாய்ச் சிவாகமநிந்தகர்களாய்ச் சைவசமயதாபக நிந்தகர்களாய் தமிழ்வேதநிந்தகர்களாய் அன்னியமதத்தர்களாயுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்களையே சற்பாத்திரமென நன்கு மதித்து அவர்களுக்கு அன்னதானமுதலியன செய்தலே புண்ணியமென்று மயங்குகின்றார்களே. ஐயையோ இஃதெவ்வளவு பெருங்கொடும் பாவம்!!!

---

## பரமசிவத்தினுடைய அட்டவீரட்டம்.

பூமன் சிரங் கண்டி யந்தகன் கோவல் புர மதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கடவூ ரிந்தக் காசினியிற்
றேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

(இ-ள்.) கொன்றைப்பூமாலையுடன் இளந்திங்களுந்தரித்துக் கொண்டருளிய பரமசிவம் வீரஞ்செலுத்தியது:—திருக்கண்டியூரில் பிரமதேவன் சிரங்கொய்ததும், திருக்கோவலூரில் அந்தகாசுரனைக் கொன்றதும், திருவதிகையில் திரிபுரம் எரித்ததும், திருப்பறியலூரில் தக்கன்முடி தடிந்ததும், திருவிற்குடியில் சலந்தரனைத் தலையரிந்ததும், திருவழுவூரில் யானையை யுரித்ததும், திருக்குறுக்கையில் மன்மதனைத் தகனஞ்செய்ததும், திருக்கடவூரில் யமனையுதைத்ததும்.

## சிவமஹாபுராணம்.

### சிவபெருமானது நித்தியத்துவ முரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முநிவர்கள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமான் யாவர்? விஷ்ணு என்பவர் யாவர்? உருத்திரன் என்பவர் யாவர்? இவர்களில் இவ்வுலகங்கட்கெல்லாம் கர்த்தாவாக உள்ளவர் யாவர்? நிர்க்குணஸ்வரூபியானவர் யாவர்? நிர்க்குணசொரூபியாயிருந்தும் பஞ்சகிருத்தியகாரணமாகக் குணசொரூபியாய் உலககாரியங்களை நடத்துகிறவர் யாவர்? இவ்விஷயங்களில் அடியேங்கட்குச் சந்தேகமிருத்தலில் இவற்றை யெங்கட்கு விளக்கியருளவேண்டும் எனக்கேட்க, ஸூதமுநிவர் :—

"ருஷிகளே, நிர்க்குணனுயுள்ள எந்தப்பரமாத்மாவால் இந்த உலகங்கள் தோன்றினவோ அந்தப்பரமாத்மாவே சிவபெருமான் என உபநிஷத்துகள் கோஷிக்கின்றன. அவ்வகைய பரமாத்மாவினுல் மற்ற இருவரும் படைக்கப்பட்டனர். புருஷனுகிய விண்டுவின் சந்தோஷத்தாலுண்டான ஜலமானது சராசரப் பிரபஞ்சமுழுதும் வியாப்தமாகையில், விஷ்ணு தவஞ்செய்திளைத்து அந்த ஜலத்தில் நித்திரை செய்தனர். அந்த ஜலசயனமுதல் புருஷனுக்கு நாராயணனென்னும் பெயராயிற்று. பிரகிருதிக்கும் நாராயணி யெனப் பெயர் வந்தது. அவ்விஷ்ணு யோகநித்திரையிலிருக்கையில் அவருடைய உந்திக்கமலத்தினின்று பிரமன் தோன்றிப் பலகாலந் தவஞ்செய்து தனக்குக் காரணபூதனுன விஷ்ணுவைக் கண்டனன். அவ்விஷ்ணு, வைகுண்டபதவியிலிருந்து, மகாப்பிரளயத்திற் சிவபெருமானிடத்தில் முக்தி கைகூடுவர். அவ்வகைய விஷ்ணுவும் பிரமனும் ஜகத்கர்த்தாக்களென்று விவாதமுடைந்தபொழுது பரமேசுவரன் அவர்கட்குக் காட்டிய உருவமே மகாதேவவுரு. இம் மகாதேவனுடைய திருமேனியில் தோன்றிய வடிவம் உருத்திரன். அந்தமூர்த்தமே தியானயோக்கியமான சிவரூபம். மற்றத் திருமாலாதி தேவர்கள் பிரகிருதி சம்பந்தமானவர்களாதலின் காலாநுக்கிரமமாக நாசமடையத்தக்கவருந் தவஞ்செய்து முக்தியடைய வேண்டியவருமாவர். உருத்திரன் அப்படி நாசமடையாமற் சிவபெருமானிடத்திலே ஐக்கியமாவான். பிரமாதி தேவர்கள் இருடிகள் மானவர்கள் யாவரும் உருத்திரனைத் தோத்திரஞ்செய்யவேண்டியவர்களே தவிர, உருத்திரமூர்த்தி ஒருவனையுஞ் சேவிக்கத்தக்

கவரல்லர். ஆனால் பிரம விஷ்ணுக்களுடன் கூடி உலககாரியங்களைச் செய்துவருகிறார்.

பிரமவிஷ்ணுக்களைப் பக்திசெய்தவர்கள் அவர்களிடத் தைக்கியமுற்று, அத்தேவர்கள் காலக்கிரமத்தில் முக்திபெறும்போது அவர்களோடு முக்தியடைவார்கள். உருத்திர பக்திசெய்பவர்கள் இதராபேக்ஷையில்லாமலே தக்ஷணம் சிவசாயுச்சியம்பெறுவரென "க்ஷரம் - பிரதான" முதலிய, வேதங்கள் முறையிடுகின்றன. ஹிரண்யகர்ப்ப பிபீலிகாதிவரையில் காணப்படும் உலகத்திலுள்ளவர்கட்கு அஞ்ஞானம் பலதிறப்படும். விஞ்ஞானமோ நித்ய சுத்த புத்த முக்த சீவ ஸ்வபாவத்தால் பலதிறப்பட்டதல்ல. ஆனால் அகண்ட ஏகரஸமாக ஒன்றியாயிருக்கும். இவையாவும் சிவஸ்வரூபமே. இதை விசாரிக்கவேண்டுவதில்லை. சர்வேசுவரனுக்குச் சதாசிவன் என்னும்பெயர் எவ்வாறு கிடைத்ததென்னில், சிவபெருமானே சிருஷ்டிக்கு முற்பட்டிருந்தவர் "ஸதேவஸௌம்யதமக்ர ஆஸீதிதி" லயத்திற்குப் பிற்காலத்தும் இருக்கிறார். "ஸர்வம் யஸ்மிந்தேவா அதிவிஸ்வேநிஷேதுஃ" சிருஷ்டிக்குப் பிற்காலத்திலும் இருக்கிறார். "யத்ப்ரயந்தியபிஸம்விஸந்தி" ஆதலின் அச் சதாசிவனென்னும் பெயர் நிர்க்குணராகிய சிவபெருமானுக்குக் கிடைத்தது. முதலில் தனது நிசுவாசத்தாலுண்டான வேதமென்னும் பெயரையுடைய வாக்கையும் பலவகைப்பட்ட மந்திரங்களையும் தியானத்தையும் பூஜையையும், "ஈஸாநஸ்ஸர்வவித்யாநாம்" முதலிய ஸ்ருதிகளால் ஸர்வ வித்தைகளுக்கும் பிரபுவான சிவபெருமான், தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமுழுதும் நல்ல நிலைமையில் வரவேண்டுமென்னும் கிருபாநோக்கமுடையவராய் விஷ்ணுமூர்த்திக்குக் கொடுத்தனர். ஆதலின் ஜகத்திற்குச் சிருஷ்டித்துவமும், இரக்ஷகத்துவமும், சாட்சியும், சம்ஹாரத்துவமும் ஜகதீசுவரனாகிய சிவபெருமானிடத்திலேயே யுள்ளனவன்றிப் பிறரிடத்தில்லை. விஷ்ணுவாதி இதர தேவர்கட்குக் காலவரையுள்ளதன்றிச் சர்வேசுவரனான சிவபெருமானுக்குக் காலகணிதி கிடையாது. சிவபெருமானுக்கு மஹாகாலன் எனப் பெயர். இவர் கட்டளைப்படி காலம் நடப்பதன்றி, அஃதிவரையொன்றுஞ் செய்யத்தக்கதன்று. எல்லாவற்றிற்கும் இவரே காரணபூதர். விஷ்ணுவாதியர் காரியபூதர். சிவபெருமானுடைய இச்சையாலே சிருஷ்டிதிதி சங்காரமுதலிய கிருத்தியங்கள் நடக்கும். சிவபெருமானுக்குக் காரணபூதரும், சிவபெருமானைச் சங்கரிப்பவரும், சிவத்து

வேஷியாயிருப்பவரும் ஒருவருமிலர். ஒருவிதையானது இலை கிளை பூ காய் முதலிய பலரூபங்களாகக் காணப்பட்டுக் கடைசியில் யாவுமழிய அவ்விதையே மிகுதியாயிருக்கின்றதுபோல இவர் தமக்குத் தாமே காரணமாகவும் ஒன்றியாகவுமிருந்தும், சிருஷ்டியாதிகாரணமாக அநேகராய், பிரளயகாலத்தில் ஒன்றியாகின்றனர். இதனை ஞானிகளுணர்வார்கள். இவர் மனோவாக்குகளுக்கெட்டாதவர்'' என்று கூறியருளினர்.

வித்வான் ஈக்காடு இரத்தினவேல் முதலியார்.

---

## ஸ்ரீ ஹரதத்தாசாரியசுவாமிகள் சரித்திரத்தின் ஒருபகுதி.

திரியகம்பா என்னும் பிராமணர் ஒருவர் யதீசுவரர் ஒருவரை அடைந்து சேவை செய்து, அநேக வித்தியாப்பியாசம் பண்ணினார். ஓர்காலத்திலே தமது குரு ஏகாந்தத்திலிருந்தபோது, எல்லா வித்தைகளும் அப்பியசித்தேன். பஞ்சாக்ஷரோபதேசமும் பெற்றேன். இவற்றிற்கு மேலறியற்பாலது யாது? என்று தமது குருவைக் கேட்ப, அவர் யோசித்து உலகத்திலே சுருதிஸ்மிருதிகளுள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் மேலானதும் ஒன்றுமில்லை. ஒப்பானதும் ஒன்றுமில்லை. இந்த இரகசியம் இவனுக்குத் தெரியவில்லையே! இவன் சந்தேகமில்லாமல் மூடனென்று நினைந்து சில இரகசியம் இன்னும் உண்டு, காலந்தரத்திலே சொல்லுகின்றேன் என்றார். இதுநோக்கிக் காலம் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படி வெகுகாலமான பின்னர், ஓர்நாள் சீஷன் போசனத்தின் பொருட்டு வெளியே போயிருப்ப, யதீசுரருக்குத் தேகவியோக காலம் கிட்டிவிட, சீஷனுக்கு யாதோ சொல்லவேண்டியிருந்ததென்பதை அவர் யோசித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தினும் மேல்ாய் அறியற்பாலது மற்றொன்றில்லை என்று நிலத்தில் எழுதிச் சரீரத்தியாகம் பண்ணினார். அதனை அருகில் நின்ற ஒரு கழைக்கூத்தியான தாசிகண்டு ஓலையில் எழுதிக் காதோலையா யிட்டுக்கொண்டு மணலெழுத்தைக் கையாலழித்து வீடுசேர்ந்தாள். சீஷன் வந்துபார்த்து, தனது ஆசாரியர் இறந்துகிடத்தலைக் கண்டு துக்கத்தோடிருப்ப, அங்கிருந்தவர்கள் உமது ஆசாரியர் எழுதிவைத்த இரகசியத்தை ஓர் தொம்பச்சி எழுதிக்கொண்டு போய்விட்டாள் என்று சொல்ல, சீஷன் அவள் வீடு தேடிப்போய், அவளைப் பலவகையாலும் உபசரித்து காதோலை தரல்வேண்டும் என்று கேட்டான்; நீ என்னோடிருந்து வசித்து என்னோடுகூட உண்பையாயின், நான் காதோலையைத் தருவேன் என்றாள்; அதற்கு அவன் உடன்பட்டு, அவளுக்குவேண்

டிய தொழில்களையெல்லாஞ்செய்து, அவளைப் பிரீதிசெய்து காதோலையை வாங்கிக்கொண்டான். அவன் தன் குரு எழுதிய பத்திரிகையைப் பார்த்து, அதிலே எழுதப்பட்ட அக்ஷரங்களைக் கண்டு மகிழ்ந்து, பின்னரும் அவளை இதுகாறுங் கூடியிருந்த தோஷமறயாது பிராயச்சித்தமாமோ என்று நினைந்து தைப்பூசத்திலே திருவிடைமருதூருக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து, மத்தியார்ச்சுனரோடு காவேரிக்குப்போய் ஸ்நானஞ் செய்து, மகாலிங்கமூர்த்தி தரிசனஞ் செய்துகொண்டு போகும்போது, அரதத்தாசாரியர் கிருகத்துக்குவந்து அவரை நோக்கி, சுவாமி! எனக்கு அன்னங் கொடுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்திப்ப, ஆசாரியர் அவரைத் தமது ஒரே பந்தியிலிருத்திப் போசனங்கொடுத்தார். போசனமுடிந்தபின் அவர் வெளியிலேவர, அதைக்கண்டு கிராமத்தார் இவன் தொம்பச்சி சகவாசம் பண்ணினவனென்று அரதத்தாசாரியருக்குப் பிரஸ்தாபித்தார்கள். பின்னர் அவர்கள் திரியம்பகரைநோக்கி நீ எந்தப்பந்தியிலிருந்து சாப்பிட்டாயென்று வினவ, அவர் உள்ளவாறு சொல்ல, அதைக்கேட்டு அவர்கள் ஆசாரியரிடத்திலேபோய், மகாபாதகனுகிய இவனோடு நீர் சாப்பிட்டது நிந்தையாமன்றோ என்றார்கள்; அப்போது அவர் அவர்களைநோக்கி, தைப்பூசத்திலே மகாகாவேரியிலே ஸ்நானம்பண்ணி மகாலிங்கமூர்த்தி தரிசனம் பண்ணியிருக்கின்றார்; ஆதலினால் அவர் மகாபாதகங்களினின்று நீங்கினார். அன்றியும் கோடி சென்மங்களிலே செய்த பாவம் சிவதரிசனத்தினாலே அக்கினியிலிட்ட பஞ்சுபோல நசித்துப்போம் என்றார். இந்த வாக்கியத்தைக்கேட்டு அவர்கள் பின்னுஞ் சொல்லுவாராயினர். அவளோ தாசி, அகோராத்திரம் அவன் அவளோடு இருந்தமையால், அவையெல்லாம் கேவலம் காவேரி ஸ்நானத்தால் எவ்வாறு நீங்கும் என்றார்கள். உடனே அரதத்தாசாரியர் அந்தப்பிராமணரைத் திரியம்பகரே என்றழைத்து. நீர் இவர்களோடு திருவிடைமருதூருக்குச் சென்று, நான் புஷ்ய நக்ஷத்திரத்திலே காவேரியில் ஸ்நானஞ்செய்து உம்மைத் தரிசனம் பண்ணினமையால் என் பாவம் போய்விட்டதோ, ஸ்வாமீ! சொல்லும் என்று கேளும் என்றார். இங்ஙனம் அரதத்தாசாரியர் அறிவுறுத்தக்கேட்ட திரியம்பகர் அப்பிராமணர்களோடு திருவிடைமருதூருக்கு போயிருந்த சமயத்திலே, ஆலயம் சிவனடியாரால் நிறைந்திருந்தது. திரியம்பகர் சுவாமியைப் பார்த்து, தேவாதிதேவரே, தயாசமுத்திரமே, புஷ்ப நக்ஷத்திரத்திலே கா

வேரி ஸ்நானத்தினுலும், உமது தரிசனத்தினுலும் அவ்வேசியோடு யான் சங்கமஞ்செய்துகொண்டு வாழ்ந்த தோஷம் போய்விட்டதா சொல்லும் என்று பிரார்த்தித்தார். அதுகேட்ட பக்தரக்ஷகராகிய மருதப்பெருமான் அவரை நோக்கி, ஏ குழந்தாய்! நீ செய்த அந்தப் பாவம் தீர்ந்துபோய்விட்டது என்ருர். சரணுகதரக்ஷகராகிய சிவ பெருமானுடைய வாக்கியத்தை அவர்கள் கேட்டு இது எதிரொலி வாக்கியமேயன்றி, ஈசுவரனுடைய வாக்கியமன்று என்று மறுத் தார்கள். இதைக்கேட்டு திரியம்பகர் கண்ணீர்வார அழுது, மீட் டும் ஆசாரியரிடம் வந்து இவர்கள் அதனை ஒப்புக்கொண்டிலர் என்று விண்ணப்பஞ்செய்தார். அப்போது அரதத்தாசாரியர் அவரோடு தாமுங்கூட ஆலயத்துக்குப் புறப்பட்டுப்போய், அந்தச் சபையிலே சுவாமியைப் பார்த்து பின்னுங் கேளும் என்ருர். அவ ரும் அப்படியே முன்போல வணங்கி வேண்டினுர். சுவாமியும் மகாமேக கோஷம்போல, மகாலிங்க தரிசனத்தினுலும், காவேரி ஸ்நானத்தினுலும், உன்பாவம் போயது போயது என அசரீரி வாக்கினுல் அருளினுர். உடனே எல்லாரும் ஆச்சரியப்பட்டு அர தத்தாசாரியரைப் புகழ்ந்தார்கள்.

அரதத்தாசாரியருடைய சகோதரியாருக்கு ஓர் முடப்புதல் வர் அவதரித்திருந்தார். இவர் ஓர் நாள் தமது மாமனுருடைய பாதங்களிலே வீழ்ந்து வணங்கி, சுமாமி உமது அருளினுலே காசி மகாக்ஷேத்திரத்து மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்ய விரும்பு கின்றேன் என்று ஆசையோடு வேண்ட, ஆசாரியர் கிராமத்திலே யுள்ள சரசிலே ஸ்நானஞ்செய்யுமாறு ஆஞ்ஞாபித்தார். மேன்மை தங்கிய புத்தியையுடைய இவர் உடனே அதில் ஸ்நானஞ்செய்ய, உடனே மணிகர்ணிகையிலே தோன்றி, பின்னர் கங்காஸ்நானஞ் செய்து, விசுவேசுரர் தரிசனஞ் செய்துகொண்டிருந்தார். இங்ங னம் சிலவருஷம் கழித்தபின், ஓர்நாள் விசுவேசுரர் ஆலயத்துக் குச் சமீபத்திலே ஒருவர் தமது பாரியாரோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் இவரை நோக்கி, ஓ பிராமணுேத்தமரே! நுண்ணறிவுடையவரே! நுமது கிராமத்திலே காசிபகோத்திரரும், நல்லோரும், வைதிகருமாகிய அரதத்தர் என் பவர் ஒருவர் இருக்கின்ருரா? என்று கேட்டார். அதற்கு அவர் நான் வசிக்கும் கஞ்சாபுரத்திலே அரதத்தர் எனப் பெயரிய என் மாதுலர் வசிக்கின்ருர். அவர் சைவேந்திரர், க்ஷேமத்தோடிருக்கின் ருர் என்ருர். அப்போது அவர் இவரது வார்த்தையைக்கேட்டு

சந்தோஷமுற்று, காசியிலே ஒருவர் அவரது க்ஷேமம் விசாரித்தார் என்று சொல்லுதிர் என்றார்; அவரோடு அங்கிருந்த பாரியும் புன்முறுவலோடு நானும் விசாரித்தேன் என்றுசொல்லுதிர் என்றார். அதைக்கேட்ட மருகனார் நான் நீங்கள் இருவருங்கேட்ட வசனம் சொல்வேனென்று சொல்லி, நான் இனி எப்படி அங்கே போகும் வன்மையுடையவனாவேன் என்றார். அதற்கு அவர் நீர் எப்படி இங்கு வந்தீரென்று கேட்க, அவர் என் கிராமத்திலே பிரம தீர்த்தம் என்று ஒன்றுளது. அதிலே ஸ்நானஞ் செய்யுமாறு என் மாமனார் ஆஞ்ஞாபிக்க, அப்படியே ஸ்நானஞ்செய்து இங்கே மணிகர்ணிகையிலே வந்து தோன்றினேன். இனி அவ்வாறுபோகச் சக்தியுடையேனல்லேன் என்றார். அதைக்கேட்ட பெரியவர் நீர் இப்பொழுதும் போய் மணிகர்ணிகையிலே ஸ்நானம் செய்யும் என்றார். அவர் அவ்வாறு மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்து, உடனே பிரமதீர்த்தத்திலே தோன்றி, மகிழ்ச்சியோடும் மாமனாரை அடைந்து வணங்கி, சுவாமீ! உமது கிருபையினால் கங்காஸ்நானஞ் செய்து போந்தேன் என, ஆசாரியர் அவரை நோக்கி, காசியிலே யாராயினும் என்னை அறிந்தார் உளரோ? என்றுகேட்ப, அதற்கு மருகனார் ஆம் காசியிலே விடரூபத்தோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த தம்பதிகள் தங்கள் க்ஷேமத்தை விசாரித்தார்கள் என்றார். அதைக்கேட்ட அரதத்தர் அவர்கள் கேட்டார்களா! கேட்டார்களா!! என்று சொல்லிக் கண்ணீர் வார ஆனந்த பரவசராய் நிருத்தனஞ்செய்தார். இதைக்கேட்ட கிராமத்தாரெல்லாரும் வந்து ஒருங்கு கூட சிவாஞ்ஞையினாலே மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்து, பிரமதீர்த்தத்திலே வந்து தோன்றினமையால், இத்தீர்த்தத்துக்கும் மணிகர்ணிகை என்று பெயர் வழங்குக என்றும், இதிலே ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவமெல்லாம் ஒழியும் என்றும் ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அரதத்தாசாரியர் முதலிய யாவரும் அற்புதமாகிய இவ்வசரீரி வாக்கைக்கேட்டு, இது அடியார்கள் பொருட்டுச் செய்யப்பட்ட சிவலீலை என்று அறிந்துகொண்டார்கள். அரதத்தாசாரியரிடத்திலிருந்து அவர் மருகனார் யாவும் அறிந்து சர்வஞ்ஞராயினார். இவர் தமது மாமனார்செய்த சுருதி சூக்தி மாலைக்கு வியாக்கியானஞ் செய்து மிகக்கீர்த்தி படைத்தார். சனங்கள் இவருடைய பக்தி விஷயத்தை நோக்கி இவருக்கும் அரதத்தர் என்று பெயர் கொடுத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவிசுவாமிகள்.

தேன் ஆப்பிரிக்கா புலாவாயோவில் தாபிக்கப்பட்டிருக்கும்,

# இந்து சன்மார்க்க சபை.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் கிளைச்சபையாகிய ஷை இந்து சன்மார்க்க சபையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா சென்ற நவம்பர்மீ 29உ இரவு 7-மணி முதல் 11½-மணி வரையில் சர்வாடம்பரமாய் கொண்டாடப்பட்டது.

அச்சமயத்தில் ஸ்ரீமான்-கோ. நாராயணசாமிநாயுடு அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். காரியதரிசி - ரா. நாராயணசாமி பிள்ளையவர்கள் சபையின் முதல் வருடச் சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்தார்கள். அதன்பின் ஷை அக்கிராசனரும் காரியதரிசியும், கணிதபரிசோதகர் ஸ்ரீமான்-கு. வடிவேல் வாண்டையாரவர்களும் முறையே மோக்ஷசாதனம், சைவசுராச்சியமும் ஆலயவழிபாடும், சந்திரன் விநாயகக்கடவுளைப் பூசித்தமை என்னும் விஷயங்களை வாசித்து உபந்நியாசங்கள் செய்தார்கள். ஸ்ரீமான் க. வயித்தியலிங்கநாடார் அவர்கள் "இந்து சன்மார்க்கம்" என்னும் விஷயமாக மிகவரிய பிரசங்கம் செய்தார்கள். ஆரம்பத்திலும் இடையிலும் முடிவிலும் தேவாரபாராயணம் நடைபெற்றது. இதன் கீழ்குறித்த ஷை சபையின் அங்கத்தினர் பதினாறுபேர்களும் ஷை நிறைவு விழாவை உடனிருந்து நடத்த, பல பத்திமான்கள் வந்து சூழ்ந்து சிரவணானந்தமடைந்தார்கள். அக்கிராசனருக்கும், சபைக்கு இடங்கொடுத்து ஆதரிக்கும் முதலி அண்டு நாயுடு அவர்களுக்கும் வந்தனமளித்து மகாசபையாருக்கு புஷ்பம் சந்தனம் தாம்பூலம் பிரசாதமுதலியன வழங்கி உபசாரங்கள் செய்யப்பட்டன.

ஷை சபையின் முதல்வருடத்து (1916ஆ நவம்பர்மீ 29உ முதல் 1917ஆ நவம்பர்மீ 28உ வரையில்) வரவு செலவுகணக்கு.

| | | பவுன் | ஷிங் | பென். |
|---|---|---|---|---|
| மாதாந்தர வரவும் வருடாந்தக்கொண்டாட்ட வரவும் ... ... | ... | 32 | 3 | 0 |

## செலவு.

| | | | | |
|---|---|---|---|---|
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு நன்கொடை ... ... | ... | 1 | 13 | 4 |
| புத்தகங்கள் ... ... | ... | 2 | 14 | 11 |
| சங்கிராந்தி கொண்டாட்டம் ... | ... | 4 | 18 | 6 |

| | | பவுன் | ஷில் | பென் |
|---|---|---|---|---|
| ஸ்ரீகோக்கலே தர்மசாத்திரத்தின் பொருட்டு நெட்டாலுக்கு அனுப்பியது | ... | 0 | 15 | 0 |
| ஸ்ரீமதி அனிபெஸண்டு அம்மை பண்டுக்கு இந்தியாவிற்கு அனுப்பினது | ... | 2 | 13 | 4 |
| சரஸ்வதி பூசை ... ... | ... | 2 | 8 | 0 |
| வருடாந்தக் கொண்டாட்டம் ... | ... | 3 | 5 | 0 |
| சபையில் பூசைமுதலியன ... | ... | 6 | 6 | 3 |
| | | 24 | 14 | 4 |
| 1917ஞு நவம்பர்மீ 28உ கையிருப்பு | ... | 7 | 8 | 8 |

## ஷை சபையின் நிர்வாக அங்கத்தினர்.

சபைத்தலைவர் ஸ்ரீமான் - கோ. நாராயணசாமிநாயுடு அவர்கள். காரியதரிசி ரா. நாராயணசாமிபிள்ளையவர்கள். உதவிகாரியதரிசி கு. வீரசோழநாடாரவர்கள். பொக்கிஷதாரர் மு. இராஜகோபாலநாயுடு அவர்கள். கணித பரிசோதகர் கு. வடிவேல்வாண்டையார் அவர்கள்.

## ஏனைய அங்கத்தினர்.

ஸ்ரீமான் - வ. பக்கிரிமுதலியாரவர்கள்.
,, க. வயித்தியலிங்க நாடாரவர்கள்.
,, க. கிருஷ்ணசாமி படையாட்சியவர்கள்.
,, பா. சுப்பையா பிள்ளையவர்கள்.
,, கு. துரைசாமி பிள்ளையவர்கள்.
,, ச. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.
,, கு. உத்தராவதி படையாட்சியவர்கள்.
,, வ. மாரிமுத்து முதலியாரவர்கள்.
,, தா. வயித்தியலிங்க படையாட்சியவர்கள்.
,, மு. ஜகநாத நாடாரவர்கள்.
,, க. முத்துகருப்ப நாடாரவர்கள்.
,, து. துரைசாமி படையாட்சியவர்கள்.
,, கி. முத்துக்குமார படையாட்சியவர்கள்.
,, நா. கோவிந்தராஜலு நாயுடு அவர்கள்.

இங்ஙனம்:
காரியதரிசி.
ரா. நாராயணசாமி பிள்ளை.